1984 மார்ச் 27]

விசைப்படகுதாரர்கள் கடலில் மீன் பிடிப்பதை வரன்முறைப்படுத்துவதற்கான சட்டம்.

*482—(வினா எண் 20889) திரு. சி. கணேசன் : மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைப்படகுக்காரர்கள் கடலில் 3 மைல் தள்ளிச் சென்று மீன்பிடிக்க வேண்டியதை வலியுறுத்தி அதற்கான புதிய சட்டத்தை உருவாக்க அரசு எடுத்துக்கொண்ட முயற்சி இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. கலைமணி : (அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மீன் பிடித்தலை முறைப்படுத்தல் சட்டம், சனவரித் திங்கள் 6 ஆம்நாள் அன்று செயலுக்கு கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு 5 (3) மற்றும் அதன் விவர அட்டவணையின்படி விசைப் படகுகள் கடலில் 3 கடல் மைல்களுக்கு அப்பால்தான் மீன்பிடிக்க வேண்டும். ஆனால் இப் பிரிவு அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று கூறி விசைப்படகுதாரர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்களை சமர்ப்பித்தார்கள். அதன் பேரில் சட்ட பிரிவு 5 (3) உள்ள நிபந்தனைகளை நிறுத்தி வைக்கும் இடைக்கால தடையாணையை உயர்நீதி மன்றம் பிறப்பித்துள்ளதால், சட்டம் நடைமுறைப்படுத்துவது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

3. தகவல் கோரல்

சட்டமன்ற விடுதி வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்து.

திரு. ந. சிவஞானம் : பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இரவு 8 மணி அளவில் சென்னை சட்டமன்ற விடுதி வளாகத்திற்குள் தீ விபத்து ஏற்பட்டு இதனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பீதியும் அச்சமும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ஏற்படாமல் தடுப்பதற்கு தலைவர் அவர்கள் தயவுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்குள்ள . பெட்டிக்கடை ஒன்றில் பீடிபற்ற வைப்பதற்கு ஒரு விளக்குவைத்திருக்கிறார்கள். விளக்கை அணைக்காமல் போயிருந்திருக்கிறார்கள்; அது எரிந்து போய்விட்டது. அதனால் எந்தவிதமான பதட்டமும், பீதியும் இல்லை. எரிந்தது சட்டமன்ற விடுதிக்கு பக்கத்தில் என்பதுதான் முக்கியத்துவம். வேறு எதுவும் இல்லை.

4. கவன ஈர்ப்புகள்

(அ) கன்னியாகுமரி மாவட்டம் குட்டக்குழி ஆரம்பச் சுகாதார நிலைய ஜீப் விபத்திற்குள்ளானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் டி. மணி, ரா. கிருஷ்ணன், ப. பொன்னுரங்கம், பொ. விஜயராகவன், ஜே. ஹேமச்சந்திரன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மற்றும் ரா. உமாநாத் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் கோதையாற்றில் குடும்பக் கட்டுப்பாடு நிலையத்திலிருந்து திரும்பும்போது ஜீப் விபத்துக்குள்ளாகி அதில் பயணம் செய்த 4 பேர்கள் இறந்தது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

12—3—1984 அன்று குலசேகரம் அரசு மருத்துவமனையில் நடக்க இருந்த குடும்பநல லேபராஸ்கோப் அறுவை சிகிச்சைக்கு விருப்பம் உள்ளவர்களை அழைத்துவர கன்னியாகுமரி மாவட்டம், குட்டக்குழி ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த பொதுச் சுகாதார ஜீப் எண்.டி.என்.கே. 233 கடந்த 11—3—1984 அன்று பயன்படுத்தப்பட்டது. கீழ்க் குறிப்பிட்ட நபர்கள் ஜீப்பில் பயணம் செய்தனர் :—

1. திரு. ராமசாமி, ஓட்டுநர், ஆரம்ப சுகாதார நிலையம், குட்டக்குழி.

2. திரு. சூசை அந்தோணி, சுகாதார உதவியாளர், ஆரம்ப சுகாதார நிலையம், குட்டக்குழி.